விலை: சதம் 75

# ஈழநாடு
THE EELANADU

மலர் 23 ஆவணி 16 துல்ஹஃ 1 இதழ் 199
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 1-9 1981

டில்கா
வாச் வேக்ஸ்
Dilka Watch Works
யாழ் நகரில் சகல மணிக்கூடுகளையும் திருத்தவும் புதிதாக வாங்கவும் விஜயம் செய்யுங்கள்.
டில்கா வாச் வேக்ஸ்
பஸ் நிலைய எதிர் மேல் மாடி
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 8174

## ஈரான் ஜனாதிபதி, பிரதமர் படுகொலை!

தெஹ்ரான், ஆக. 31
தெஹ்ரானில் இடம்பெற்ற குண்டு வெடிப்பு சம்பவமொன்றில் ஈரான் ஜனாதிபதி ஜனாப் முகமது அலிரஜாய்யும், பிரதம மந்திரி ஜனாப் பஹானுர்னரும் பலியானார்கள்.

தெஹ்ரானிலுள்ள பிரதம மந்திரியின் அலுவலகத்தில் உயர் ஆட்சிபீடத்தின் கூட்டமொன்று நடைபெற்றுக்

[6ம் பக்கம் பார்க்க]

# மூன்று அம்ச உடன்படிக்கை: உயர்மட்டக்குழு நியமனம்!

## யாழ். மாநகரசபை அஞ்சலி

[யாழ்ப்பாணம்]
இலங்கை வந்திருந்த இந்திய உல்லாசப்பயணி திரு. என். தனபதியின் அகால மரணம் குறித்தும், மாஸ்கோவில் மரணமான டாக்டர் எஸ். ஏ. விக்கிரமசிங்காவின் மரணம் குறித்தும் யாழ். மாநகரசபைக் கூட்டத்தில் 2 நிமிட மௌனம் அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ். மேயர் திரு. இ. விசுவநாதன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் இருவரது மரணம் குறித்தும் ஏகமனதாக அனுதாபத் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

திரு. தனபதியின் அனுதாபத் தீர்மானத்தின் பிரதிகள் அவரது குடும்பத்தினருக்கும் இந்தியப்பிரதமர் திருமதி இந்திரா காந்தி, தமிழகமுதல்வர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் ஆகியோருக்கும், டாக்டர் விக்கிரமசிங்காவின் அனுதாபத்தீர்மானத்தின் பிரதிகள் அவரின் குடும்பத்தினர்

[6ம் பக்கம் பார்க்க]

## வங்கிக்கிளைகள் திறப்புவிழா

[யாழ்ப்பாணம்]
மக்கள்வங்கியின் இரண்டு கிளைகள் நாளை திறந்துவைக்கப்படும்.

[illegible] கன்னாதிட்டி மக்கள் வங்கி[illegible] நாளைக்காலை 9-30 ம[illegible] பருத்தித்துறை மக்கள்வங்கிக்கிளை நண்பகல் 12 [illegible]ணிக்கும் திறந்து வை[illegible]டும்.

[illegible]ளைகளை யாழ் மாவட்ட அமை[illegible]ச்சர் திறந்துவைப்பார்.

## அரசுகூட்டணிகூட்டறிக்கை வெளியிடப்பட்டது

— நமது நிருபர் எஸ். மகாலிங்கசிவம் —

**அரசாங்கத்துக்கும் தமிழர்விடுதலைக்கூட்டணிக்குமிடையே மூன்று கட்டங்களாக நடைபெற்ற பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து, இருசாராருக்குமிடையே மூன்று அம்சங்களில் ஏற்பட்ட உடன்படிக்கைகளின் கூட்டுஅறிக்கை, நேற்று இரவு வெளியிடப்பட்டது.**

தற்போதய அரசியல் நிலைமைகளையும் நாட்டின் பலபகுதிகளிலும் நடைபெற்ற வன்செயல்களையும் ஆராய்ந்து, இனத்துவேஷத்துக்கும் இனக்கலவரத்துக்கும் முற்றுப்புள்ளி வைக்கும் நோக்குடன் இருசாராருக்குமிடையே இவ்வொப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது.

'தமிழ் ஈழம்' கோரிக்கையை 6 மாதங்களுக்கு கைவிடுவதென்ற எதுவும் உடன்படிக்கையில் இடம் பெறவில்லை.

ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனவுக்கும், தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலதிபரும் எதிர்க்கட்சித் தலைவருமான திரு. அ. அமிர்தலிங்கத்துக்கு மிடையே நேற்று மூன்றாவது கட்டமாக தொடர்ந்த பேச்சுவார்த்தைகளையடுத்து இருசாராருக்குமிடையே ஏற்பட்ட உடன்பாடுகளின் கூட்டறிக்கை வெளியாகியுள்ளது தமிழர் விடுதலைக்கூட்டணியினரின் சம்மதத்துடன் ஏற்றுக்கொள்ளப்பட்ட உடன்படிக்கைகள் என்று வெளியிடப்பட்டுள்ள இக்கூட்டறிக்கையில் ஜனாதிபதி திரு. ஜே ஆர். ஜயவர்த்தன ஒப்பமிட்டுள்ளார்.

இன்றைய அரசியல் சூழ்நிலைகளையும் நாட்டின் பலவேறு பகுதிகளிலும் நடந்த வன்செயல்களையும் ஆராய்ந்து இனத்துவெஷத்தை தணிக்க

[6-ம் பக்கம் பார்க்க]

## தமிழகம்முழுவதும் 8ம்திகதி பூரண ஹர்த்தால்!
### அனைத்துக் கட்சிகள் தீர்மானம்

[சென்னை]
இலங்கையில் நடைபெற்ற வன்செயல்களைக் கண்டித்து தமிழகம் எங்கும் இம்மாதம் 8ம் திகதி பூரண ஹர்த்தால் அனுஷ்டிப்பதென்று தமிழகத்தைச்சேர்ந்த அனைத்துக்கட்சிகளும் தீர்மானித்துள்ளன.

தமிழகமுதல்வர் திரு எம். ஜி. இராமச்சந்திரன் தலைமையில் நேற்று நடைபெற்ற அனைத்துக்கட்சி கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

ஹர்த்தாலை ஒட்டி தமிழகம் எங்கும் அரசாங்க அலுவலகங்கள் வங்கிகள், கடைகள், தனியார்துறை நிறுவனங்கள், தொழிற்சாலைகள், பாடசாலைகள் ஆகியன காலை 6 மணி முதல் இரவு 8 மணிவரை மூடப்பட்டிருக்கும் என்றும் அன்றையதினம் சினிமாத் தியேட்டர்களில் படக்காட்சிகள் காண்பிக்கப்படமாட்டாது என்றும் -

போக்குவரத்துசேவைகள் எதுவும் இயங்கமாட்டாது என்றும் தமிழகஅரசு அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மக்களின் வசதிகருதி சுகாதாரசேவை, மின்சாரசேவை, தண்ணீர்சேவை ஆகியன வழமைபோல் இயங்கும் என்றும் அந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஊர்வலம் நடத்திய காங்கிரஸ் தொண்டர்கள் கைது

சென்னை, ஆக 31
இலங்கையில் நடைபெற்ற வன்செயல்களைக் கண்டித்து சென்னையில் உள்ள இலங்கைத் தூதுவராலயத்தை நோக்கி ஊர்வலம் நடத்திய நூற்றுக்கு மேற்பட்ட இந்திரா காங்கிரஸ் தொண்டர்கள் இன்று கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் மூவர் பெண்கள். இந்திராகாங்கிரஸ் தமிழ்நாடு

[6-ம் பக்கம் பார்க்க]

★ நம்பிக்கை ★ பாதுகாப்பு ★ உத்தரவாதம்
உங்கள் முதலீட்டிற்கு பாதுகாப்பும் ஆகக்கூடுதலான வட்டியும் வழங்கும் நிறுவனம்
முதலிட்ட நாள் தொடக்கம் 30 % மாதாந்தம் வட்டி வழங்குகின்றோம்
"மீளப்பெறுதல்"
நீங்கள் விரும்பும் நேரத்தில் வட்டியைப் பாதிக்காத வகையில் 'மீளப்பெறலாம்!
டிரான்ஸ்லங்கா இன்வெஸ்ற்மென்ட் லிமிட்.
77 1/1, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 7027
[ மத்திய வங்கி நாணய சபையினரால் அங்கீகரிக்கப்பட்ட ஸ்தாபனம் ]
பிரதி சனிக்கிழமையும் பிற்பகல் 4 மணிமுதல் 4-30 மணிவரை
"இரைதேடும் பறவைகள்" என்னும் நாடகத்தைக் கேட்கத் தவறாதீர்கள்

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

Toyota Coaster 26 ஆசனங்கள் உடைய பஸ் 1978 மொடல் விற்பனைக்கு உண்டு. 2-9-81 அன்று பார்வையிடலாம். விமல் சாமல்ஸ், 131/2, பருத்தித்துறை வீதி, நல்லூர். 0801

## தேவை

தேநீர் கடைக்கு சகல வேலைகளும் தெரிந்தவர் தேவை. நேரில் வரவும். விபரங்களுக்கு: ராஜ விலாஸ் 494, கண்டி வீதி, அரியாலை 0793

## வாடகைக்கு

2 அல்லது 3 படுக்கையறைகள் உள்ளதும், தண்ணீர் மின்சாரம் முதலிய சகல வசதிகளுடனும்கூடியதுமான ஒரு தனி வீடு யாழ். மாநகரசபை எல்லைக்குள் உடனடியாகத் தேவை. விண்ணப்பிக்கவும் விளம்பர இல: 0797 பே/பெ ஈழநாடு யாழ்ப்பாணம். 0797

## பயிற்சி

றேடியோ - டெலிவிஷன், ஏயர் கொண்டிசனிங், வெல்டிங் மூன்றுமாத டிப்ளோமா பயிற்சி வகுப்புகள் ஆரம்பம் 2-9-81 அனைவரும் சேரலாம். நாசனல் அக்கடமி, மொரம் சாக் கட்டிடம், கிராண்ட் வீதி, யாழ்ப்பாணம். 0764

## நீதிபதி அனுமதி

(பருத்தித்துறை)

பஸ் பொலிஸ் நிலையம் மூடப்பட்டதையடுத்து, அங்கு சில நாட்களில் கையொப்பமிட்டு வந்த சில சந்தேக நபர்கள் கிராம சேவை அலுவலர் காரியாலயங்களில் கையொப்பமிடுவதற்கு பளை சுற்றுலா நீதிமன்ற நீதிபதி திரு. விக்னேஸ்வரன் அனுமதி வழங்கியுள்ளார். (ச)

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

மரண சாதனம் எதையும் நிறைவேற்றாது இறந்த "சிவபதி" கே. கே. எஸ். வீதி இணுவில் கிழக்கு இணுவிலில் வசித்த மாணிக்கர் திருநாவுக்கரசு அவர்களின் மரணச் சொத்துக்கு நிர்வாக அதிகாரப்பத்திரம் பெறுவதற்கான விண்ணப்பம் சம்பந்தமான விடயத்தில்

(மரணமெய்தியவர்)

தத்துவ வழக்கு இலக்கம்/த/3587

இணுவில், இணுவில் கிழக்கு கே.கே.எஸ் வீதி "சிவபதி" மாணிக்கர் திருநாவுக்கரசுகைம்பெண் சிவபாக்கியம்.

மனுதாரர்

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணச் சொத்து வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்துக்கு நிர்வாக அதிகாரப்பத்திரத்தைப் பெறுவதற்காகத்தொடரப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள ஆள்எவரும் 1981-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 4-ம் திகதி முற்பகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன்முற்றுனதாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

1981-ம் ஆண்டு ஆடி மாதம் 9-ம் திகதி நீதிமன்றக்கட்டளைப்படி

தா. குலஞானம்
பதிவாளர்

வரைந்தவர்:
ச. செல்வராசா
மனுதாரின்
சட்டத்தரணி 0798

## சைவநெறியில் வாழ்ந்தால்

(சாவகச்சேரி)

நாம் சைவ நெறியில் இம்மியளவும் பிசகாது உள்ளத் தூய்மையோடு இந்நெறித் தொண்டுகளைச் செய்துவாழ்ந்தால் கடவுள் அவர்களுக்கேற்ற முறையில் அருள் பாலித்து அவர்களைத் தம்பால் ஈர்த்துக்கொள்வார்.

இவ்வாறு கல்லாரை அறுகம்புலம் மகாகணபதிப் பிள்ளையார் கோவில் 16-ம் ஆண்டுப் பூர்த்தி விழாவில் பேசுகையில் சைவசித்தாந்தப் பண்டிதர் கு வி. மகாலிங்கம் கூறினார்.

அதிபர் க. தம்பு தலைமையில் நடந்த இவ்விழாவில் ஆசிரியர் திரு. எஸ். காசிநாதன், திரு. கே. கே. பிள்ளை முத்துசாமி உட்படப் பலர் உரையாற்றினர். (க)

## பின்முற்றுகும் கட்டளை அறிவித்தல்

மல்லாகம்
மாவட்ட நீதிமன்றம்

மரணசாதனமின்றி மரணமெய்திய தெல்லிப்பளை தென் மேற்கு கொல்லன் கலட்டி கந்தையா கணேசலிங்கம் பெண் இராசலட்சுமியின் மரணச்சொத்து விடயத்தில்

மரணமெய்தியவர்

சிவகுரு பரமசிவம் கருகம்பானை, தெல்லிப்பளை தென் மேற்கு

மனுதாரர்

மரணச்சொத்து)
நியாயாதிக்கம் ) ரி/68

எதிர்

பராயமடையாத-
(1. கணேசலிங்கம் பரமேஸ்வரன்
(2. கணேசலிங்கம் இராசநாயகி
(3. கணேசலிங்கம் கேதீஸ்வரன்

எல்லோரும் குளமங்கால் தெல்லிப்பளை

1, 2, 3-ம் எதிர்வாதிகள் பராயமடையாதவர்களாதலினால் தங்கள் வழக்குக் காவலன் 4-ம் எதிர்வாதி மூலம் வெளிப்படுகின்றனர்.

4. கந்தையா கணேசலிங்கம் கட்டிசப்பாய் கொல்லன் கலட்டி, தெல்லிப்பளை தென் மேற்கு

எதிர்வாதிகள்

மேலே கூறப்பட்ட தத்துவ வழக்கு மேலே குறிப்பிடப்பட்ட காலஞ்சென்றவரின் மரணச்சொத்தை நிரவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் விண்ணப்பஞ் செய்யப்பட்டுள்ளது. அம்மனுவின் பேரில் அதன் பிரகாரம் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது. இவ்விண்ணப்பத்தில் அக்கறையுள்ள நபர்கள் எவரேனும் 1981-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 16-ம் திகதி முற்பகல் 9-00 மணிக்கு முன்னராக இந்நீதிமன்றத்தின் முன் தோன்றி இவ்வாறு பதியப்பட்டபின் முற்றுகும் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாது என்பதற்கும் தகுந்த காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

1981-ம் ஆண்டு ஆவணி மாதம் 28-ந் திகதி

ஒப்பம்:
கணேசன்
பதிவாளர்

வரையப்பட்டது:
ஒப்பம்
வ மயில்வாகனம்
மனுதாரரின் சட்டத்தரணி 0768

## தீவுப்பகுதி

# படகுசேவையை மீண்டும் ஆரம்பித்து நடத்தவேண்டும்

### யாழ். மா. சபை தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

தீவுப்பகுதிகளுக்கு பெருவிதிகள் திணைக்களம் நடத்தி வந்த படகு சேவையை மீண்டும் நடாத்துமாறு கோரும் தீர்மானம் யாழ். மாவட்ட அபிவிருத்தி சபையில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் இத்தீர்மானத்தைக் கொண்டுவந்திருந்தார்.

தீர்மானத்தின் விபரம் வருமாறு:-

"குறிகாட்டுவானிலிருந்து நெடுந்தீவுக்கும் ஊர்காவற்றுறையிலிருந்து எழுவைதீவு, அனலைதீவு, நயினாதீவுக்கும் பெருவிதிகள் திணைக்களம் நடாத்திவந்த படகு சேவை தொகுதி எம். பிக்கோ, மக்களுக்கோ அறிவிக்கப்படாமல் நிறுத்தப்பட்டுள்ளது. இச்சேவை மீண்டும் தொடங்க வேண்டும்.

"மேற்குறிப்பிட்ட இடங்களுக்கு படகு சேவையை, எம். பி கேட்டுக்கொண்டபடி மேலதிகமாகவும் ஒரு முறை நடத்தவேண்டும்."

இவ்விடயம் மிகவும் பிரதானமானதாகையால் யாழ். மாவட்ட அமைச்சரும், யாழ். அரசாங்க அதிபரும் பெருவீதிகள் திணைக்கள அமைச்சருடனும், செயலாளருடனும் தொடர்புகொண்டு செப்டம்பர் மாதம் 1-ம் திகதி தொடக்கமாவது இச்சேவையை நடாத்த ஆவன செய்யுமென இச்சபை கருதுகிறது."

இத்தீர்மானத்தை சபை ஏகமனதாக ஏற்றுக்கொண்டது. (மா)

## சாவகச்சேரி பஸ் நிலையம்:

# இரண்டரை லட்சரூபா செலவில் நிறுவப்படும்

### நகரசபைத்தலைவர் தகவல்

(சாவகச்சேரி)

முழுநேர ஊழியனாகக் கடமையாற்றச் சந்தர்ப்பம் கிடைத்தமைக்காக இந்நகர எல்லைக்குட்பட்ட மக்களுக்கு நன் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளேன்.

சென்ற நகர சபைத் தேர்தலில் செய்துகொண்ட கனவான் ஒப்பந்தப்பிரகாரம் புதிய தலைவராகக் கடமை ஏற்றுள்ள திரு. இ. க. மயில்வாகனம் மேற்கண்டவாறு கூறினார்.

சுமார் இரண்டரை லட்சம் ரூபாசெலவில் புதிய நவீன பஸ் நிலையம் அமைக்க உடன் ஆரம்பவேலைகள் தொடங்கவிருப்பதாக அவர் தெரிவித்தார்.

சாவகச்சேரி நகர சபைப் பொது நூல் நிலையத்தை ஆரம்பிப்பதற்கே காரணகர்த்தாவாக இருந்த நன்றிக்கடனுக்காக முன்னாள் உள்ளூராட்சி அமைச்சர் திரு. எம். திருச்செல்வம், திருமதி புனிதம் திருச்செல்வம் ஆகியோரது உருவப்படங்களைச் சபையின் பொது நூல் நிலைய மண்டபத்தில் திரைநீக்கம் செய்து வைக்கவேண்டுமென்றும் அவர் தெரிவித்தார்.

சபையின் ஒவ்வொருமாதாந்தக்கூட்டமும், வரியிறுப்பாளர்களின் தேவைகளைக்காலதாமதமின்றி நிறைவேற்றுவதற்காக, நகர சபை உத்தியோகஸ்தர்களின் வசதியை முன்னிட்டு மாதந்தோறும் மூன்றாவது புதன்கிழமை காலை நடாத்துவதென முடிவுசெய்யப்பட்டிருப்பதாகவும் கூறினர். (க)

## நல்லூரில் பணியாற்றிய

# சாரணர்கள், சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் குழுவுக்கு பாராட்டு!

(கோண்டாவில்)

யாழ் மாவட்ட சாரணர்கள் நல்லூர் திருவிழாவின்போது மிகவும் திறமையாக தமது சேவையை யாற்றியுள்ளார்கள் பொலிஸ் பாதுகாப்புக் கிடைக்குமோ இல்லையோ என்று நாம் எதிர்பார்த்த நடத்திய மகாநாட்டில் சாரணர்களின் பிரதிஆணையாளரையும் கலந்து கொள்ளும்படி கேட்டு அவரின் அனுமதியுடன் பாடசாலை மற்றும் திரி சாரணர்களின் அமைப்புடன் இவ்விழா நடப்பதற்கு போதிய உதவியை அளித்துள்ளார்கள்.

யாழ். மாநகர சபை முதல்வர் திரு. இ. விஸ்வநாதன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

சாரணர்களின் தேனீர் விருந்துபசார வைபவம் நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாசாலை மண்டபத்தில் யாழ். மாவட்ட சாரண உதவி ஆணையாளர் திரு. எஸ். மூர்த்தி தலைமையில் நடைபெற்றது.

பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட யாழ். நகர முதல்வர் திரு. விஸ்வநாதன் சாரணர்களின் சேவை இந்நேரத்தில் மிகவும் அளப்பரிய சேவையாக அமைந்துள்ளது. இதே நேரம் சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவிப் படையினர் தமது கடமையிலும் பார்க்க இம்முறைஒருபடி கூட வேலைசெய்துள்ளார்கள். அவர்கள் மிகவும் திறமையாகவும் உண்மையாகவும் போற்றத்தக்க முறையிலும் தமது சேவையை யாற்றியுள்ளார்கள்.

மற்றும் நல்லூர் உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். சபாபதிப்பிள்ளை, கிராம சேவையாளர் திரு. குமாரசுவாமி மற்றும் ஆசிரியர்களும் உரையாற்றினார்கள். (க)

## வல்வெட்டித்துறை பெண் கடத்தல்:

# 4 இளைஞர்களுக்கு ரிமாண்ட் வான் பொலிஸ்பாதுகாப்பில்

(பருத்தித்துறை நிருபர்)

வல்வெட்டித்துறைப் பெண் கடத்தல் சம்பவம் தொடர்பான சந்தேக நபர்கள் நால்வரையும் ரிமாண்டில் வைக்குமாறு பருத்தித்துறை நீதவான் உத்தரவிட்டார்.

கடந்த 24ம் திகதி இரவு வல்வெட்டித்துறையில் சட்டவிரோதமாகக் கூடி ஒருத்தி வீட்டினுள் புகுந்து. சேத

(5-ம் பக்கம் பார்க்க)

# கோட்டு விற்பனவு விளம்பரம்

### யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

வழக்கு இல. சடு 369

1. அந்தோனி யோசெப்புவும் பெண்
2. ஆகத்தம்மாவும்
இருவரும் இல: 36
மவுண் கார்மல் வீதி, யாழ்ப்பாணம்
- வழக்காளிகள்

எதிராக
செல்லையா கனகரத்தினம்
கிருஸ்ணபாலன்
4ம் கட்டை, சுதுமலை மானிப்பாய்
- எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் ஈடு வழக்கு இல: 369ல் எனக்கு கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னும் விபரிக்கப்படும். ஒரு துண்டுக் காணியை 1981ம் ஆண்டு புரட்டாதி மாதம் 23ம் திகதி (23-9-81) புதன்கிழமை காலை 10 மணிக்கு அந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

முதல் வட்டி ரூபா: 3350/-ம் 17-12-1976 தொடக்கம் 3-3-1980 வரைக்கும் ரூபா 1500/-க்கு வருடம் ஒன்றுக்கு நூற்றுக்கு 12 வீதவட்டியும் அதன்பின் அத் திகதி தொடக்கம் தீர்வை முழுத்தொகைக்கும் இறுக்கப்படும் வரை வருடம் ஒன்றுக்கு நூற்றுக்கு 9 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 706 சதம் 35ம்.

### ஆதன விபரம்

வடமராட்சி யாழ்ப்பாணடிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி சுண்டிக்குளி கோவிற்பற்று கரையூர் இலை, "மங்கை பாக்கியவயல்" நிலப்பரப்பு (3½) மூன்றரையும் கல்வீடும் குசினியும் கிணறும் செய்யபயிர் வாங்கியர்களும் எல்லை கிழக்கு நீக்கிலசப்பிள்ளை முத்துத்தம்பியின் ஆதனம் வடக்கு பெரிய தெரு மேற்கு டாக்டர் றொபெட் இராசரத்தினம் கைம்பெண் மாகிறேற் சானற்றின் ஆதனம் தெற்கு வாய்க்கால் இதடங்கலிற் சொரிபலாய் அரைவாசியில் (2/10) பத்தில் இரண்டு பங்கும் அதற்குச் சேர்ந்தவைகளும்

அ. சிவானந்தன்
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்

"திருநிலை கல்யாணி"
பலாலி றோட்டு
திருநெல்வேலி வடக்கு,
யாழ்ப்பாணம். 14-8-81 0796

### மணிவாக்கு

ஆழநோக்கில் கனிந்த உள்ளத்தின் வேட்கையும் இறைஞ்சுதலும் இறையின் இறைஞ்சுதலேயாகும். எல்லாம் கடந்த பரம்பொருள் மனிதனின் எளிய நாவின் வாயிலாகவும் தனது பிரார்த்தனையை நிகழ்த்துகின்றது.

— ஃப்ரேடிறிக் ஹெய்லர்

# நமது நோக்கு

## 'அம்மே மட்ட சமாவென்ன'

உலகின் முதற் பெண் பிரதமராக, பன்னிரண்டு வருடங்கள் நாட்டின் பிரதமராக ஆட்சிபுரிந்து சர்வதேசப் புகழ் பெற்ற திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா இன்றைய நிலையில் கவலை அடைவதற்குப் பல காரணங்கள் உண்டு.

பதவியை மட்டுமல்ல குடியுரிமையும் இழந்த முன்னை நாள் பிரதமரின் மனோநிலை எளிதில் புலப்படும் தன்மையதல்ல. ஆயினும் இரண்டு கருத்துக்கள் அவருடைய மனத்தை தளர்ச்சியடைய வைப்பது இயற்கை.

ஒன்று; இன்று நாட்டில் நடைபெற்ற சம்பவங்கள், இன்றும் நிலவும் அமைதியின்மை தமது ஆட்சியில் தலைகாட்டவில்லை என்பது.

பதவியிலிருப்பவர்களை எதிர்க்கட்சியிலுள்ளவர்கள் கண்டிப்பது இயல்பும் இலகுவானதும்; இவர்கள் மீண்டும் பதவிக்கு வந்துவிட்டால் சொல்வதெளிது சொல்லிய வண்ணம் செய்தலரிதென்பதை உணர்வார்கள்.

கடந்தகால துன்பியல் நாடகத்தின் காட்சிகளை மீளாய்வது அர்த்தமற்றது. ஆயினும் வரலாற்றில் பின்னோக்கு முக்கிய கட்டங்களில் அவசியமானது.

1956-ம் ஆண்டு இடம் பெற்ற 'சிங்களம் மட்டும்' சட்டம் இந்நாட்டின் அமைதியை இன்றும் குலைத்து வருகிறது 1958-ம் ஆண்டு நிகழ்ந்த இனக்கலவரம் தக்கநேரத்தில் தடைப்பட்டிருந்தால் தமிழ் மக்களைத் தாக்குதல் ஒரு சாமான்ய சம்பவமாகி வந்திராது.

திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் ஆட்சியில் இனக்கலவரம் ஏற்படாவிட்டாலும், ஒன்பது தமிழ் இளைஞர்கள் யாழ்ப்பாணத்தில் நடந்த அகில உலகத் தமிழ் மாநாட்டின் இறுதி நாளில் அகால மரணம் அடைந்தது பற்றி விளக்கமோ, வருத்தமோ தெரிவிக்க அரசு மறுத்திருந்தது சர்வதேச நீதிக் கோட்பாட்டுக்கும் மனித உரிமைக்கும் மாறான செயலென்பது மறப்பதற்கில்லை.

கடந்த சுதந்திரக் கட்சியின் ஆட்சிகளில் ஆரம்பமான இன ஒதுக்கல் மற்றைய ஆட்சியில்தொடர்ந்து வந்ததை நாடறியும். விளைவு: இன்றைய பரிதாபமான நிலை, தமிழ்மக்களைப் பொறுத்தளவில் எவ்வித பாதுகாப்புமற்ற இரண்டாந்தர [அல்லது மூன்று?] நிலை.

திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவுக்கு நாட்டில் செல்வாக்கும் அனுதாபமும் இருப்பதை மனிதாபிமானம் கொண்ட மக்கள் ஆட்சேபிக்க மாட்டார்கள்.

ஆனால் அவருடைய மனதில் இன்று குடிகொண்டிருக்கும் இரண்டாவது கருத்து தம்முடைய கட்சி - சு. த. கட்சி - தம்முடைய கணவர் திறுவிய கட்சி, பிரிவினைப் பட்டு வருவதே! எக்காலத்திலும் மனத்திண்மையை இலகுவில் குன்றவிடாத அம்மையார் தமது மகன் தமக்கு எதிரே கட்சிகட்டுவது அவர் கனவிலும் கண்டிராத காட்சியாகும்.

இந்த நிலைமையில் பெண்மை நிரம்பிய முன்னைநாள் பிரதமர், இவர்களெல்லோரும் தம்முடைய முன்னைநாள் ஆதரவாளர்களும் தம்மை எதிர்த்த தமிழ் மக்களின் கட்சிகளும் ''அம்மே மட்ட சமாவென்ன'' என தனிச்சிங்கள வசனம் சொல்லுங்காலம் கிட்டுவதாக கற்பனை செய்வது இயல்பு. அது நடக்கமுடியாத சம்பவம் என்று நாம் சொல்லவும் முடியாது.

தமிழ்மக்களைப் பொறுத்தளவில், நாடு ஐ. தே. கட்சிக்கோ அல்லது சுதந்திரக் கட்சிக்கோ எழுதப்பட்டதல்ல; தமிழ் மக்கள் கூட்டணிக்கெழுதுப்பட்டவர்களல்லர், இதனை எவரும் கவனத்திற்கொள்ளவேண்டும்.

'பரந்து வளைந்த இந்த இருளில், ஒருபடி ஏறமுடியுமானால்போதும்' என்ற கிறீஸ்தவக் கீதத்தை மகாத்மா காந்தி இவ்வித அபாயகரமான வேளைகளில் ஊன்றிப்பாடுவாராம்.

இந்த நாட்டில் அமைதியாகவும், மானத்துடனும் வாழ்ந்த தமிழ் மக்கள் அவ்விதமே பாதுகாப்புடன் வாழ வழிகாண்பதே முதற் படி.

மற்றவையெல்லாம் பின்

## ஈரான்

முப்பது மாதங்களுக்கு முன் ஈரானில் நிகழ்ந்த இஸ்லாமிய சோஷலிச புரட்சி, இன்று உலக்கை தேய்ந்து உழிப்பிடியான நிலைக்கு வந்துள்ளது.

புரட்சித் தலைவன் அயத்தோலா கொமெய்னியைப் பொறுத்தளவில், காலத்துக்குக் காலம் அவர் ஏற்படுத்திய கடும் துரோக தண்டனைகள், உள்ளூர் கிளர்ச்சிகள், புரட்சிக்கெதிரான வன்செயல்கள் கட்டுக்கடங்காத நிலையில் நாட்டை அழிவுப் பாதையில் இட்டுச் செல்கின்றது.

தனித்து நிற்கும் இத்தலைவர் தாம் மீட்கவந்த இந்நாட்டின் பெருந்தலைவர்கள் - ஜனாதிபதிகள், பிரதமர்கள், முக்கிய அமைச்சர்கள், மதத்தலைவர்கள் பலர் வன்செயல்கள் காரணமாகவோ அல்லது அரசியல் அகதிகளாகவோ அகன்றுவிட்டனர்.

குறிப்பாகக்கூறின், பாரீஸ் மாநகரிலிருந்து விடுதலை வீரராக வந்த அயத்தோலாவுடன் ஒரே விமானத்தில் வந்த ஐந்து வீரர்கள்- பதவியிழந்த ஜனாதிபதி பானிசத்ர் உட்பட அனைவரும் இன்று ஆட்சியில் இல்லை அதேபோல புரட்சித் தலைவர் அயத்தோலா கொய்மோனியை தெஹ்ரான் விமானநிலையத்தில் வரவேற்கவந்திருந்த புரட்சித் தலைவர் ஆறுபேரும் இக்கதிக்காளாகினர். இஸ்லாமிய குடியரசு கட்சியின் தலைவரும் பிரதம நீதியரசருமான அயத்தோலா பெஹஸ்டி சென்ற குண்டு வெடிப்பில் உயிரிழந்தது குறிப்பிடத்தக்கது. இவர்களில் மூவர் கொல்லப்பட்டதும் புரட்சியின் வேகத்தை விளக்குகிறது.

பாரிசிலிருந்து மதத்தலைவர் கொமெனியுடன் வந்த முன்னைநாள் பானிசத்ர், பதவியிழந்து உயிருக்கு ஆபத்தான நிலையில் திரும்பியும் பாரிஸில் அரசியல் தஞ்சம் பெற்றிருப்பது ஈரானின் அரசியல் திட்பநுட்பங்களுக்கு ஒரு எடுத்துக்காட்டு.

எலலாவற்றிற்கும் இன்று நாம் கேள்விப்படும் இன்னொரு குண்டுவெடிப்பு, இன்றைய ஜனாதிபதி முகமட் அலி றஜாய் அவர்களையும், பிரதம மந்திரி ஜவாத் பஹனோர் படுகாயத்துள்ளாக்கிவிட்டது. காயப்பட்டவர் இன்னும் பலர், உயிரிழந்தவர்கள்

டென்மார்க் தேசத்தில் ஏதோ நாற்றம் வீசுகின்றது" என்றொரு ஆங்கிலப்பழமொழி, ஈரான் கடந்த பல வருடங்களாக ஷாவின் சர்வாதிகார ஆட்சியிலும், அதனை ஒழித்து மக்களுக்கு நிவாரணம் அளிக்கவந்த இஸ்லாமிய ஆட்சியிலும் நிலைகுலைந்திருப்பது கண்கூடு.

மரண தண்டனையை பிரான்ஸில் ஒழிக்க ஜனாதிபதி மிற்றரான்ட் முன்வந்திருக்கும் உலகில் ஈரான் தினசரி மக்களை துரோகமென்னும் குற்றத்துக்கு நூற்றுக்கணக்கில் சுட்டுத் தள்ளுவது எந்த நூற்றாண்டைச் சுட்டுகிறது.

# அழியாது அவர்நினைவு என்றும்

— முல்லைக்கவி —

### வெண்பா

மாங்காய் வடிவலர்ந்த மாஈழநாடதனில்
நீங்கா ஒளிவிளக்காய் நின்றுமிக - ஓங்குபுகழ்
செந்தமிழை நன்றுய்ந்து சீர்மிகுநன்னூல்வகுத்தோன்
சென்றே பரனுலகு சேர்ந்தார்

ஃ ஃ ஃ

தகமைசால் சான்றோன் தனிநாயகப் பெம்மான்
தகவுடைய பன்மொழிகள் தக்க - மிகவுடையோன்
என்றும் இகமீதில் ஏர்பூத்த சான்றோனாய்
சென்றே பரனுலகு சேர்ந்தார்.

ஃ ஃ ஃ

ஒப்பரிய மாமறையின் ஓர்குருவாய்த் தீட்சைபெற்று
தப்பிலாது யேசுவிற்கு தன்பணியை - எப்போதும்
நன்றே பலியீந்து நற்குருவில் நாயகமாய்
சென்றே பரனுலகு சேர்ந்தார்.

ஃ ஃ ஃ

கசடறக் கற்றதனி நாயகத்தின் மாண்பு
கசடறக் கற்றோரில் மாண்பே - கசடறவே
பன்மொழிப் புலவன் பைந்தமிழின் காவலனர்
சென்றே பரனுலக சேர்ந்தார்.

ஃ ஃ ஃ

ஈண்டு தமிழ்வளர்த்த இன்தமிழின் வல்லோரில்
சான்றோனெனவிளங்கி மேதினியில் - நீண்டபணி
நித்திலத்தில் நின்று நிறைவாகச் செய்துவைத்து
சென்றே பரனுலகு சேர்ந்தார்.

ஃ ஃ ஃ

இன்றோ ஓராண்டு சென்று மறைந்தாலும்
என்று மவர்நினைவு எம்மனத்தில் - குன்று
தொளிவீசும் கோபுரத்து மாவிளக்காய் நின்று
அழியாதவர்நினைவு என்றும்.

(தவத்திரு தனிநாயகம் அடிகளாரின் ஓராண்டு நினைவுதினம் இன்று)

# சமூக சகோதரத்துவ வாரம் அனுஷ்டிக்க கோரிக்கை

## அறவழிப் போராட்டகுழு மகஜர்

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்ட அபிவிருத்தி சபைப் பிரதேசத்தில் சமூக சகோதரத்துவ வாரத்தினை அனுஷ்டிக்க பிரகடனம் செய்யுமாறு அறவழிப் போராட்ட குழு, யாழ்.மாவட்ட அபிவி[ரு]த்தி சபைத்தலைவரைக் கேட்டுள்ளது.

மகாத்மா காந்தி பிறந்த தினமாகிய அக்டோபர் 2ம் திகதி முதல் ஒரு வார காலத்துக்கு இந்து, கிறிஸ்தவ ஆலயங்கள், தேநீர்க் கடைகள், முடிதிருத்தும் நிலையங்களில் சகல சமூகத்து மக்களும் எவ்வித வேறுபாடுகளுமின்றி தத்தம் அலுவல்களை கவனிக்க வழுவகைகள் செய்யப்பட வேண்டும் என்றும் மகஜரில் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்தி சபைக்குட்பட்ட பிரதேசத்தில் இன்னமும் 63இந்து ஆலயங்களில் சமத்துவ வழிபாடு இடம் பெறாமல் இருக்கிறது என்றும் தேநீர்க்கடைகள், முடிதிருத்தும் நிலையங்களில் சகல சமூகத்து மக்களும் தமது தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாத நிலையில் சமூக அமைப்பு இருந்து வருகிறது என்றும் மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சமூக - சகோதரத்துவ நிலையினை உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் ரீதியாக நடைமுறைப் படுத்துமாறும் அறவழிப் போராட்டக் குழுகேட்டுள்ளது. [மா]

# ஏட்டுச்சுவடிகள் அன்பளிப்பு

[யாழ்ப்பாணம்]

வண்ணார்பண்ணை பொன்னப்பா ஒழுங்கையைச்சேர்ந்த திரு. சற்குருநாதர் பரமகுருநாதர் என்பவர்இரு நூற்றுக்கும் அதிகமான அரும் ஏட்டுச்சுவடிகளை யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறை தொல்பொருள் அகத்திற்கு அன்பளிப்புச் செய்துள்ளார்.

திரு சற்குருநாதர் பரமகுருநாதர் தனது தகப்பனார் வைத்தியர் சேதுகாவலப்பிள்ளை, சற்குருநாதரினதும் அவரின் தகப்பனார் ஏரம்பர் சேதுகாவலப்பிள்ளையினதும் தமது முன்னோர்களினதுமான சமயம்- தத்துவம், நிகண்டு அகராதி, இலக்கணம், இலக்கியம். சோதிடம், மருத்துவம், மந்திரீகம் என்பன அடங்கிய இருபத்தாறு ஏட்டுச்சுவடிகளை யாழ் பல்கலைக்கழகத்துக்கு அன்பளிப்பாக வழங்கினார்.

# நாடும் நடப்பும்

பாராளுமன்றத்தில் ஒருநாள் உறுப்பினர் ஒருவருக்குத் திடீரென்று நெஞ்சு நோய் வந்து அவதிப்பட்டார். உடனே சபாநாயகர் சபைக்கூட்டத்தை ஒத்திவைத்தார். இதற்கு முன்னதாகவே சபை உறுப்பினர்களாக விருந்த இரண்டு டாக்டர்கள் நோய் வாய்ப்பட்ட உறுப்பினரிடம் விரைந்து முதலுதவி செய்தனர் அந்த இரண்டு டாக்டர்களும் யார் தெரியுமா?

ஒருவர் டாக்டர் இ. எம் வி. நாகநாதன். மற்றவர் டாக்டர் எஸ். ஏ விக்கிரமசிங்கா இருவரும் சிறந்த வைத்தியர்கள். நாட்டுக்கும் சமூகத்துக்கும் ஏற்பட்ட வியாதியைக் குணப்படுத்துவதற்காக சேவையிலிறங்கியவர்கள். தங்களையே இதற்காக அர்ப்பணித்தவர்கள். இன்று இருவருமே அமரராகி விட்டனர்.

சிலமாதங்களுக்கு முன்னர் தான் டாக்டர் விக்கிரமசிங்காவின் எண்பதாவது பிறந்த தினத்தை கம்யூனிஸ்ட் கட்சி பெருவிழாவாகக் கொண்டாடியது.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியில் [மாஸ்கோ சார்பு] பெரும் நெருக்கடி யேற்பட்டது. டாக்டர் விக்கிரம சிங்காவையும் மற்றும் சிலரையும் கட்சியிலிருந்தே நீக்கி வைப்பதென்று கட்சித்தலைமைப்பீடம் தீர்மானம் நிறைவேற்றியது.

இதுபோன்ற நெருக்கடிகள் கட்சியில் ஏற்பட்ட போதெல்லாம் அதனுள்ளேயே உறுதியுடன் போராடி சரியான வழியில் திசை காட்டி வெற்றி கண்டவர் டாக்டர் விக்கிரம சிங்கா.

இந்த நாட்டில் மொழிப் பிரச்னை தலைதூக்கிய போது சிங்கள மக்கள் பெரும்பான்மையாக வாழும் இந்த நாட்டில் சிங்களம் உத்தியோக மொழியாக இருக்கவேண்டுமென்று கூறும் அதேவேளையில் தமிழ்மக்கள் பெரும்பான்மையாக வாழும் பாரம்பரிய பிரதேசங்களின் நடவடிக்கைகள் அம் மக்களின் மொழியான தமிழ் மொழியிலேயே நடைபெற வேண்டுமென்று வழிகாட்டியவர் டாக்டர் விக்கிரமசிங்கா.

இலங்கையில் மலேரியா கொள்ளை நோயாக உருவெடுத்து மக்களைக் குடும்பம் குடும்பமாகப் பலியெடுத்த காலத்தில் டாக்டர் விக்கிரமசிங்கா ஆற்றிய சேவையை தென் மாகாணம் இன்றும் மறக்கவில்லை.

இலங்கை அரசாங்க சபைக்கு 1931-ம் ஆண்டில் உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்ட முதலாவது இடதுசாரி டாக்டர் விக்கிரம சிங்காவாகும். 1933-36ம் ஆண்டுகளில் மலேரியா நோய்க்கு சுமார் ஒருலட்சம் பேர் இலங்கையில் மாண்டனர். இச் சமயத்தில் ஐந்தாம் ஜோர்ஜ் மன்னர் ஆட்சிபீடமேறிய வெள்ளி விழாவுக்கு வாழ்த்துத் தெரிவித்து பிரேரணை ஒன்று அரசாங்க சபையில் ஆளும் கட்சியினால் கொண்டுவரப்பட்டபோது மலேரியா நோய் வெள்ளைக்கார ஆட்சியினால் வந்ததென்று வாதாடி பிரித்தானியரின் கொள்ளைச் சுரண்டலிலிருந்து விடுபட வாய்ப்பளிக்குமாறு திருத்தப் பிரேரணை கொண்டு வந்தவர் டாக்டர் விக்கிரம சிங்கா.

ஊர்சுற்றி

# தெஹ்ரானில் குண்டுவெடிப்பு
# ஜனாதிபதி, பிரதமர் படுகாயம்!
## 5 பேர் பலி!

தெஹ்ரான், ஆக. 31

தெஹ்ரானில் இடம்பெற்ற குண்டுவெடிப்பு சம்பவமொன்றில் ஈரான் ஜனாதிபதி முஹம்மட் அலி ரஜாயும், பிரதமமந்திரி ஜனாப் ஜவாத் பஹோனேர்வும் படுகாயமடைந்தனர்.

ஈரானிய பிரதமமந்திரியின் அலுவலகத்தில் உயர் ஆட்சி பீடக்கூட்டமொன்று நடைபெற்றுக் கொண்டிருந்த போதே இக்குண்டு வெடிப்பு சம்பவம் இடம்பெற்றதாக தெரிவிக்கப்பட்டது.

இக்கூட்டம் நடைபெற்ற பிரதமமந்திரியின் அலுவலக அறையில் 15 பேர் இருந்ததாகவும், இவர்களில் 5 பேர் இக்குண்டு வெடிப்பு சம்பவத்தின் போது பலியானதாகவும் அறிவிக்கப்பட்டது.

இக்குண்டு வெடிப்பின் போது படுகாயமடைந்த ஈரானிய ஜனாதிபதியும், பிரதமமந்திரியும் தற்போது சிகிச்சைக்காக வைத்தியசாலையொன்றில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவத்தையடுத்து ஈரானின் அமைச்சரவையை சபாநாயகர் உடனடியாகக் கூட்டினார். ஈரானின் அமைச்சரவைக் கூட்டத்தில் பல முக்கியமான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. இவை பற்றிய விபரங்கள் எதுவும் வெளியிடப்படவில்லை.

அமெரிக்காவின் சதிவேலையே இக்குண்டு வெடிப்பு சம்பவத்திற்குக் காரணமென ஈரான் தெரிவித்துள்ளது.

பிரான்சில் தற்போது அரசியல் தஞ்சமடைந்துள்ள ஈரானின் முன்னாள் ஜனாதிபதி ஜனாப் பானி சதார் ஈரானில் தற்போது இடம்பெற்றுள்ள கண்மூடித்தனமான ஆட்சியினாலேயே இத்தகைய சம்பவங்கள் அங்கு இடம்பெற்று வருவதாகத் தெரிவித்துள்ளார்.

ஈரானின் ஜனாதிபதிப்பதவியிலிருந்து ஜனாப் பானி சதார் நீக்கப்பட்ட பின்னர் அங்கு பல குண்டு வெடிப்பு சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன.

கடந்த ஜூன் மாதம் ஈரானின் இஸ்லாமிய தலைமை அலுவலகத்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்பு சம்பவமொன்றில் அயத்தொல்லா கொமெய்னியின் தீவிர ஆதரவாளரான அயத்தொல்லா பெஸஸ்டி உட்பட 74 பேர் பலியானது தெரிந்ததே. (வெ)

## அங்கோலாவின் தென் பகுதியில் தென்னாபிரிக்க துருப்புக்கள்

லிஸ்பன், ஆக. 31

அங்கோலாவின் தென்பகுதியில் தென்னாபிரிக்க துருப்புகள் முன்னேறியுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

அங்கோலா துருப்புகளுக்கும், தென்னாபிரிக்க துருப்புகளுக்குமிடையே நடைபெற்ற கடும் யுத்தத்தின் போது அங்கோலாவிலுள்ள பல நகரம் முற்றாக நாசப்படுத்தப்பட்டுள்ளதாக இதனைச் சென்று பார்வையிட்ட பிரிட்டிஷ் தூதர் தெரிவித்துள்ளார்.

இக்கடும் யுத்தத்தின்போது அங்கோலா துருப்புகள் ஐந்து தென்னாபிரிக்க யுத்த விமானங்களை சுட்டு வீழ்த்தியிருந்தது தெரிந்ததே. (வெ)

## அமெரிக்கா இராணுவ உதவி!

வாஷிங்டன், ஆக. 31

பிலிப்பைன்ஸ், தாய்லாந்து, இந்தோனேஷியா, சிங்கப்பூர் ஆகிய தென்கிழக்காசிய நாடுகளுக்கு இராணுவ உதவி வழங்க அமெரிக்கா தீர்மானித்துள்ளது. (வெ)

## பரஸ்பர ஒத்துழைப்பு

லண்டன், ஆக. 31

தென் யெமன், லிபியா, எத்தியோப்பியா ஆகிய மூன்று நாடுகளும் பரஸ்பர ஒத்துழைப்பு உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திட்டுள்ளன.

அரசியல், பொருளாதார, சமூக துறைகளில் இம்மூன்று நாடுகளும் பரஸ்பர ஒத்துழைப்பை வழங்குவதென இவ் உடன்படிக்கையில் தெரிவித்துள்ளன.

மத்தியதரைக்கடல் பிராந்தியத்தில் இடம்பெற்றுவரும் அமெரிக்காவின் இராணுவப் போக்கை இம்மூன்று நாடுகளும் கண்டித்துள்ளன. (வெ)

## கடத்தலைத்தடுக்க நவீனபடகு!

சென்னை, ஆக. 31

இலங்கைக்கும் இந்தியாவிற்குமிடையே நடைபெற்று வரும் கள்ளக்கடத்தலை தடுப்பதற்காக இரண்டு நவீன கடத்தல் தடுப்புப் படகுகளை தென்கொரியாவிலிருந்து தமிழ்நாடு அரசு இறக்குமதி செய்துள்ளது.

இப் படகு ஒவ்வொன்றும் 17 லட்சம் ரூபா பெறுமதி வாய்ந்ததாகும். (வெ)

## இமையாணன் கொலைவழக்கு:
## மேல் நீதிமன்றத்தில் விசாரிக்கப்படும்
### மூன்றும் எதிரி விடுதலை

புலோலி)

இமையாணன் சிங்கராசா கொலை வழக்கு யாழ். மேல் நீதிமன்றத்திற்குப் பாரப்படுத்தப்பட்டுள்ளது. வழக்கின் 3ம் எதிரி விடுதலை செய்யப்பட்டார். 1ம், 2ம் எதிரிகள் மேல் நீதிமன்ற விசாரணைக்குப் பாரப்படுத்தப்பட்டுள்ளனர்.

1980 நவம்பர் மாதம் 6ம் திகதி உடுப்பிட்டி இமையாணனைச் சேர்ந்த சின்னத்துரை சிங்கராசாவை வெட்டிக் கொலை செய்ததாக வல்வெட்டித்துறைப் பொலிசார் வல்வெட்டியைச் சேர்ந்த கிருஷ்ணபிள்ளை, ஸ்ரீஸ்கந்தராசா, வைரமுத்து ஜெயராசா, கார்த்திகேசு இரத்தினவேல் ஆகியோர் மீது குற்றஞ்சாட்டி வழக்குத்தாக்கல் செய்திருந்தனர்.

இவ்வழக்கு பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் திரு. கே. எஸ். மகேசன் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டு வந்தது.

1ம் எதிரி சார்பில் சட்டத்தரணி எஸ். ஜெயலிங்கமும், 2ம் எதிரிசார்பில் சட்டத்தரணி முத்துக்குமாருவும், 3ம் எதிரிசார்பில் சட்டத்தரணி எஸ். கிருஷ்ணராசாவும் ஆஜராகி இருந்தனர்.

பொலிசார் சார்பில் வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையப்பொறுப்பதிகாரி திரு. கே. உடுகம்பொலவும், அரசதரப்புச் சட்டத்தரணி ஜெயத் ஓமரும் ஆஜராகியிருந்தனர்.

3ம் எதிரி கார்த்திகேசு இரத்தினவேலுவை இவ்வழக்கின் விசாரணைக்காக மேல் நீதிமன்றத்திற்குப் பாரப்படுத்துவதற்குப் போதிய ஆதாரங்கள் இல்லாமையினால் 1979ம் ஆண்டு 15ம் இலக்க குற்றவியல் நடைமுறைச்சட்டம் 153ம் பிரிவின்கீழ் விடுதலை செய்வதாகவும், ஆனால் குறித்த 3ம் எதிரியைப் பற்றி வல்வெட்டித்துறைப் பொலிசார் மேற்கொண்டும் புலன் விசாரணை செய்ய வேண்டுமென்றும். இவ் எதிரி இக்கொலைக்கு வேறு எவ்விதத்திலேனும் உடந்தையானவோ, உதவியாகவோ, ஒத்தாசையாகவோ இருந்தார் என்றும் கொலைச் சதியில் ஈடுபட்டிருந்தார் என்பன பற்றிய ஆதாரங்கள் கிடைத்தால் 153-ம் பிரிவின் கீழ் எதிரியை மன்றில் சந்தேக நபராக பொலிசார் கொண்டுவர வேண்டுமென்றும் 1ம் எதிரியாகிய கிருஷ்ணபிள்ளை ஸ்ரீஸ்கந்தராசாவையும் 2ம் எதிரியாகிய வைரமுத்து ஜெயராசாவையும் மேல் நீதிமன்ற விசாரணைக்குப் பாரப்படுத்துவதாகவும் நீதவான் தீர்ப்பில் தெரிவித்து, எதிரிகளின் கைவிரல் அடையாள அறிக்கையை அடுத்த மாதம் 9ம் திகதி சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டார். (க)

## மட்டக்களப்பிற்கு
## ஜனாதிபதி, அமைச்சர் குழு அக்டோபரில் விஜயம்

(மட்டக்களப்பு)

ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன எதிர்வரும் அக்டோபர் மாதம் 5ம் திகதி மட்டக்களப்பு மாவட்டத்திற்கு உத்தியோக பூர்வமாக விஜயம் செய்யவிருக்கிறார்.

மட்டக்களப்பு பல்கலைக்கழக கல்லூரி, புதிய புகையிரத நிலையம், மாநகர நுழைவாயில் பாலம் மகாதோரணம், பிராந்திய அபிவிருத்தி அமைச்சகத்துக் கொண்டான் கோழிப்பண்ணை, கட்டுநகர் பஸ் நிலையம், விபுலானந்தர் இசைக் கல்லூரி, கல்லடி விபுலானந்தர் மணிமண்டபம் ஆகியவற்றைத் திறந்து வைப்பதோடு இசைக் கல்லூரி கட்டிடத்திற்கான அத்திவாரக் கல்லையும் நாட்டி வைப்பார்.

ஜனாதிபதியுடன் போக்குவரத்து அமைச்சர் ஜனாப் மொகமட், கல்வி அமைச்சர் திரு. ரனில் விக்கிரமசிங்க, கிராமிய அபிவிருத்தி அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் உட்பட பல அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், மாவட்ட மந்திரிகளும் கலந்து கொள்வார்கள் (க)

## பளைப் பகுதிக்கு மின் விஸ்தரிப்பு

(பச்சிலைப்பள்ளி)

பளைப் பகுதியில் மின்சார விஸ்தரிப்பிற்காக 55 ஆயிரம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.


இதில் 40 ஆயிரம் ரூபா வண்ணாங்கேணி வீதி மின்சார விஸ்தரிப்பிற்கும், 8 ஆயிரம் ரூபா தட்டாதெரு மின்சார விஸ்தரிப்பிற்காகவும், 7 ஆயிரம் ரூபா பிரதான வீதி மின்சார விஸ்தரிப்பிற்காகவும் பயன்படுத்தப்படவுள்ளது.

இதற்கான நிதியினை கிளிநொச்சி எம்.பி. திரு. வீ. ஆனந்தசங்கரி 1981-ம் ஆண்டு பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத்திட்டத்திலிருந்து ஒதுக்கீடு செய்தார். (க)


மீண்டும் வந்துள்ளது
மாணவ நண்பன்



Pilot BALL POINT
பைலட் மத்தியதர போல் பாயின்ட்



சிறப்பான எழுத்திற்கு உகந்த பைலட் எங்கும் பெற்றுக்கொள்ளலாம்

ரூ. 1/80

SRI COMMUNICATIONS

விற்பனையாளர். ஷோ வொலஸ் அன்ட் ஹெஜஸ் கொழும்பு 3. டெலிபோன்:- 20671 - 9

# யாழ். வன்செயல்கள் ரூ. 1,26,36 ஆயிரம் நஷ்டஈடுகோரி யாழ். மாநகரசபை வழக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் நடந்த கலவர சம்பவத்தின்போது சேதமடைந்த யாழ். பொது சன நூலகம், மற்றும் யாழ். மாநகரசபையின் சந்தைக் கட்டிடங்களுக்கு 1,26,36,000 ரூபா அரசின் பிரதிநிதியான சட்டமா அதிபரிடமிருந்து நஷ்டஈடு கோரி யாழ். மாநகரசபை நேற்றுக் காலை யாழ். மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தது

யாழ். மாநகரசபைக்காக இவ்வழக்குப் பிராதை சட்டத்தரணி செ. சந்திரகாசன், சட்டத்தரணி எஸ். எஸ். எம். சகீது, சட்டத்தரணி பி. நவரத்தினராசா கியூ. சி ஆகியோர் தயாரித்து நெறிபடுத்தியுள்ளார்கள்.

இவ்வழக்கு பிராதை சட்டத்தரணி த. சோமசுந்தரம் நேற்று யாழ். மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார்.

பிராதில் கூறப்பட்டிருப்பதாவது:

"1981 மே 31-ந் திகதி இரவு யாழ். பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு உதவியாக அனுப்பப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்களும் ஏற்கனவே இருந்த பொலிஸ் உத்தியோகத்தர்களும் ஒன்றிணைந்தும், கருத்தொருமித்தும் பலாத்காரம், விஷமத்தனம், தீயிடல் கட்டுக்கடங்கா நாசவேலை ஆகியவற்றை புரிந்ததன்மூலம் வழக்காளியின் ஆதனமான யாழ். மாநகரசபையின் பஸ் நிலைய சந்தை கட்டிடத்துக்கு அடாத்தாகவும் சட்டத்திற்கு விரோதமாகவும் சேதத்தை ஏற்படுத்தியுள்ளார், இதன் இழப்பு ரூபா 1,57,500 என வழக்காளி மதிப்பிடுகிறார்.

"இலங்கை அரசின் கீழ் சேவையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களின் மேற்குறித்த செயல்கள் அவர்களது வேலை நேரத்திலும், வேலைவரம்புக்குள்ளும் புரியப்பட்டது குறித்து பொலிஸ் உத்தியோகத்தர்களின் மேற்குறித்த செயல்களுக்கு இலங்கை அரசே சட்டத்தின் கீழ் பொறுப்பாகும்.

"யாழ்ப்பாணம் நவீன சந்தை முதலாம் இரண்டாம் கட்டங்களுக்கு ரூ. 1,25,000 சேதம் என வழக்காளியால் மதிப்பீடுசெய்துள்ளது.

"யாழ் மாநகர பெரிய கடை சந்தைக்கு அடாத்தாகவும், சட்டவிரோதமாகவும் சேதத்தை ஏற்படுத்தியுள்ளனர். 46 000 ரூபா சேதம் என இது மதிப்பிடப்பட்டுள்ளது.

"யாழ் நகர பழைய சந்தைக்கு சேதம் ஏற்படுத்தியுள்ளனர். இதன் சேதம் ரூ. 18000 என மதிப்பிடப்பட்டுள்ளது.

பொலிஸ் உத்தியோகத்தர் சிலர் ஒன்றிணைந்தும், கருத்தொருமித்தும் பலோத்காரம் விஷமத்தனமான தீயிடல், கட்டுக்கடங்கா நாசவேலை ஆகிய செயல்களை புரிந்ததன் மூலம் வழக்காளிக்கு சொந்தமான யாழ். மாநகர பொதுசன நூலக கட்டடம், தளபாடம், மின்இணைப்பு, பெறுமதிமிக்க புத்தகங்களுக்கு அடாத்தாகவும் சட்டத்திற்கு விரோதமாகவும், சேதத்தை ஏற்படுத்தியுள்ளனர். இந்த சேதத்திற்கு 1,17,00,000 ரூபா வழக்காளியால் மதிப்பீடுசெய்யப்பட்டுள்ளது.

"எனவே எதிராளிக்கு எதிராக 1,26,36,000 ரூபாவையும் வட்டியையும் கோட்டு செலவும் வழங்கவேண்டும் என தீர்ப்பளிக்குமாறு வழக்காளி கோருகிறார். [க]

## ரூ.22லட்சம் நஷ்டஈடுகோரி யோகேஸ்வரன் வழக்கு தாக்கல்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணத்தில் நடந்த கலவரத்தில்போது சேதமடைந்த வீடு, வாகனங்கள், தளபாடங்கள், ஆபரணங்களுக்கும், மன, உடல் உளைச்சலுக்கும் 22 லட்ச ரூபா அரசின் பிரதிநிதியான சட்டமாஅதிபரிடம் கோரி, யாழ் எம். பி, திரு. வி. யோகேஸ்வரனும் திருமதி ச. யோகேஸ்வரனும், யாழ் மாவட்ட நீதிமன்றத்தில் நேற்றுக் காலை சட்டத்தரணி ஆர். பாலசுப்பிரமணியம் மூலம் வழக்குத் தாக்கல்செய்துள்ளனர்.

வழக்கின் பிரதை சட்டத்தரணி செ. சந்திரகாசன், சட்டத்தரணி பி. நவரத்தினராசா கியூ சி. ஆகியோர் தயாரித்து நெறிப்படுத்தினர். வழக்கின பிராதில் கூறப்பட்டிருப்பதாவது:

ஸ்ரீலங்கா அரசின் ஊழியரான பொலிஸ் உத்தியோகத்தர்கள் தொழிலில் ஈடுபட்டிருந்தபோதும் கடமைக்குட்பட்ட செயலில் ஈடுபட்டிருந்த போதும், வழக்காளிகள் வசித்தவந்த யாழ். பருத்தித்துறை வீதியிலுள்ள ஆதனத்திற்கும், தளபாடத்திற்கும், ஆபரணங்களுக்கும், மோட்டார் ஜீப் வாகனங்களுக்கும் சேதம் ஏற்படுத்திஉள்ளனர். இதன் சேதம் இருபது லட்சம் என மதிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் குறித்த வழக்காளிகளை கொலை செய்து அவர்களின் உடல்களை நெருப்பிற்கு போடவும் எத்தனம் செய்தார்கள். இதனுல் ஏற்பட்ட மனஉடல் உளைச்சலுக்கு நஷ்ட ஈடாக 2 லட்சம் ரூபா வழங்கவேண்டும்.

"ஸ்ரீலங்கா அரசு வழக்காளி போன்றவர்களுக்கும் பாதுகாப்பு அளிக்க கடமையுடையவர்கள். அப்படியான பாதுகாப்பு அளிக்க தவறியதால் மேற்குறிப்பிட்ட சம்பவம் ஏற்பட்டது. இதற்கு பொறுப்பு அரசே. பொலிஸ் உத்தியோகத்தர் அரசின் ஊழியர்கள். ஆனபடியால் அரசின் பிரதிநிதியான சட்டமா அதிபரை 22 லட்சம் நஷ்டஈடு வழங்குமாறும் மேற்குறித்த தொகை கொடுக்கும்வரை மாதம் 15,000 ரூபா நஷ்டஈடு வழங்கவேண்டும் எனறும் தீர்ப்பளிக்குமாறு கோருகிறோம். [க]

## தனியார் நிறுவனம் ரூ. 23,86,000 கோரி வழக்கு

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணத்தில் நடந்த கலவரத்தில் சேதமடைந்த பிள்ளையார் விரோரசின் உரிமையாளர் கே. இராசதுரை அரசின் பிரதிநிதியான சட்டமா அதிபரிடம் 23,86,000 ரூபா நஷ்டஈடு கோரி யாழ். மாவட்ட நீதிமன்றத்தில் நேற்று சட்டத்தரணி த. சோமசுந்தரம் மூலம் வழக்குத்தாக்கல்செய்தார்.

வழக்கின் பிராதில் கூறப்பட்டிருப்பதாவது:

யாழ்ப்பாணத்தில் ஏற்கனவே இருந்த பொலிசாருக்கு உதவியாக அனுப்பப்பட்ட பொலிசாரும், ஏற்கனவே இருந்த பொலிசாரும் இலங்கை அரசின் ஊழியர் என்பதுடன் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டும் நோக்கத்துடனேயே யாழ்ப்பாணப்பகுதியில் நிலைகொண்டிருந்தனர்.

1981 ஜூன் 1ம் தேதி இரவு குறிப்பிட்ட பொலிஸ் உத்தியோகஸ்தர்களில் சிலர் ஒன்றிணைந்தும், கருத்தொருமித்தும், பலாத்காரம் விஷமத்தனமான நிலையில கட்டுக்கடங்காத நாசவேலை ஆகியவற்றை புரிந்ததன்மூலம் வழக்காளியின் வியாபார நிலையத்திற்கு சேதம் ஏற்படுத்தியுள்ளனர். வழக்காளி தனது வியாபார ஸ்தாபனத்திற்கும், உடைமைகளுக்கும் 23,86,000ரூபா சேதம் என மதிப்பீடு செய்துள்ளார். தொடர் நட்டமாக மாதம் 15,000 இருப்பதால் அதனையும் வழங்க வேண்டும். [க]


ஹோம் பினன்ஸ் லிமிட்டெட்
ஆரம்பித்திருக்கும்
லக்சரி பஸ் சேவை

யாழ்ப்பாணம் — கொழும்பு

கண்ணியமான, பாதுகாப்பான பஸ்சேவை
பதிவு செய்வதற்கும் டிக்கட்டுகளுக்கும்:

ஹோம் பினன்ஸ் லிமிட்டெட்

இல: 82, கன்னுதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்
தொலைபேசி இல: 8310.

யாழ்ப்பாணத்தில் டிக்கட் பெறுமிடங்கள்:

(1) ஹோம் பினன்ஸ் லிமிட்.
இல: 82, கன்னுதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: இல: 8310

(2) யாழ். மெட்டல் சேல்ஸ் சென்ரர்
இல: 6, நவீன சந்தை, யாழ்ப்பாணம்,
தொலைபேசி: இல: 7596.

புறப்படுதல் விபரங்கள்:
இடம்: கன்னுதிட்டிச் சந்தி, யாழ்ப்பாணம்
நேரம் மாலை 7 - 45 மணி

யாழ்ப்பாணப்பாணத்திலிருந்து புறப்படுதல்:
செவ்வாய், வியாழன்,
ஞாயிற்றுக்கிழமைகளில்

கொழும்பிலிருந்து புறப்படுதல்:
திங்கள், புதன், வெள்ளிக்கிழமைகளில்


### ஈரான்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கொண்டிருந்தபோது இக்குண்டு வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஜனுப் பானிசதார் ஈரானின் ஜனுதிபதி பதவியிலிருந்து நீக்கப்பட்ட பின்னர் கடந்த ஜூன் மாதம் ஈரானின் புதிய ஜனுதிபதியாக முகமது அலி ரஜாய் பதவியேற்றிருந்தார். இவர் வகித்த பிரதம மந்திரிப் பதவிக்கு ஜனுப் பஹாகுர்னுர் நியமிக்கப்பட்டார்.

இக்குண்டுவெடிப்பு சம்பவத்தின்போது மூன்று பேர் பலியானதாகவும், 9 பேர் காயமடைந்ததாகவும் அறிவிக்கப்பட்டது.

ஈரானிய பிரதம மந்திரியினதும், ஜனுதிபதியினதும் சடலங்கள் முற்றுக எரிந்த நிலையில் காணப்பட்டதாகவும், இவர்களின் பற்களைக் கொண்டே சடலங்கள் அடையாளம் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த ஜூன் மாதம் முதல் ஈரானில் 500க்கும் மேற்பட்டவர்களுக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டதாகவும், அதனை எதிர்த்தே இக் குண்டுவெடிப்பு சம்பவம் இடம் பெற்றிருக்கலாமெனவும் அரசியல் அவதானிகள் கருதுகிறுர்கள்.

[முன்னர் வந்த செய்தி 4-ம் பக்கத்தில்]

### மூன்று அம்ச...

[1-ம் பக்கத் தொடர்ச்சி)

வும் அதை முற்றுக ஒழிக்கவும் கீழ்க்காணும் 3 தீர்மானங்கள் இரு சாராராலும் ஏற்றுக்கொள்ளப்படுவதாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கூட்டறிக்கை

உடன்பாடு

ஜனுதிபதி தலைமையில் பிரதமர் மற்றும் சில அமைசர்களும், தமிழர்விடுதலைக்கூட்டணித்தலைவர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலரும் அடங்கிய உயர்மட்டக்குழு ஒன்று நியமிக்கப்படும்.

காலத்துக்குகாலம் அநேகமாக வாராவாரம் கூடும் இக்குழு பிரச்னைகளுக்கான தீர்வுகளுக்குரிய வழிவகைகள் பற்றி ஆராயும்.

சகல அரசியல்கட்சிகளினதும் ஒத்துழைப்புடன் வன்செயல்களை ஒழிக்க ஒத்துழைப்பது.

மாவட்ட அபிவிருத்தி சபைகளை சரியானமுறையில் நடைமுறைப்படுத்துவது.

இவையே மூன்று உடன்படிக்கைகளுமாகும்.

ஜனுதிபதி மாளிகையில் நேற்று இரவு 7-30 மணிக்கு நடைபெற்ற சந்திப்பின்போது ஜனுதிபதி, பிரதமர் ஆகியோருடன் அமைச்சர்கள் ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ், காமினி திஸாநாயக்க, லலித் அத்துலத் முதலி, சிறில் மத்யூ, ஏ. ஸி, எஸ். ஹமீட், நிஸங்க விஜயரத்தின, கே. டபிள்யூ. தேவநாயகம், ரனில் விக்ரமசிங்க ஆகியோர் கலந்து கொண்டனர். திரு அமிர்தலிங்கத்துடன் திருவாளர்கள் எம் சிவசிதம்பரம், இரா சம்பந்தன், கலாநிதி நீலன் திருச்செல்வம், பேராசிரியர் ஏ ஜே வில்சன் ஆகியோர் கலந்து கொண்டனர்

இரு மணித்தியாலங்களாக நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் பின் கூட்டறிக்கை கைச்சாத்தானதும் பேராசிரியர் வில்சன் நேற்று இரவே கனடா திரும்பினுர்.

குறித்த உயர்மட்டக்குழு இம்மாதம் 16ம் தேதி முதன் முதலாகக் கூடும். [ம]

### யாழ். மாநகரசபை...

(1ம் பக்கத் தொடர்ச்சி]

ருக்கும் மற்றும் கம்யூனிஸ்ட் கட்சி காரியாலயத்துக்கும் அனுப்பிவைப்பதென முடிவு செய்யப்பட்டது. [யா]

### ஊர்வலம்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

செயலாளர் உட்பட மற்றும் சில கமிட்டி உறுப்பினர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேசமயம், திருச்சியில் இலங்கைவன்செயல்களைக்கண்டித்து ஊர்வலம் நடத்திய இளைஞர் காங்கிரஸ் தலைவர் திரு. சம்பத் உட்பட சிலர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

## மரண அறிவித்தல்

### திருமதி தயாளரெட்னம் பொன்னுச்சாமி

திருமதி தயாளரெட்னம் பொன்னுச்சாமி காலமாகிவிட்டார். இவர் காலம் சென்ற முன்னுள் கூட்டுறவு உதவி ஆணையாளர் வல்லிபுரம் பொன்னுச்சாமியின் அன்பு மனைவியும், காலம்சென்ற தேவபாலன் ஜோ-தேவ்ஆனந், தெவேந்திரன், திருமதி விமலா இராஜரெட்னம், பமிளா பொன்னுச்சாமி ஆகியோரின் அன்புத் தாயாரும், காலம்சென்ற கிருபை சரவணமுத்த, காலம்சென்ற வணக்கத்திற்குரிய கே. எஸ் ஜெயசிங்கம் ஆகியோரின் அன்புக் சகோதரியும் ஆவர். அன்னுரின் பூதவுடல் ''தயாள லொட்ஜ்'' புகையிரதநிலைய வீதி, சாவகச்சேரியில் இருந்து நல்லடக்கத்திற்காக சாவகச்சேரி கிறிஸ்தவ சேமக்காலைக்கு இன்று செவ்வாய்க்கிழமை மாலை 4-30 மணியளவில் எடுத்துச் செல்லப்படும்

0808

தகவல் : ஜோ-தேவ்ஆனந்

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்குவீதி, 63-ம் இலக்கத்திலுள்ள 'ஈழநாடு' லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதி 303ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1981 ஞு மீ செப்டம்பர் 1-ம் திகதி அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post office: Sri Lanka. Regd. Q. B. 100236/81. P. O. Box 49. Jaffna. தொலைபேசி: 7707, 889, 8126.